255

ஓம்

கடவுள் துணை.

இந்தியா கவிரத்ந மஞ்சரி நெ-6.

# கோவிலூர் திருநெல்லை நாயகி

அஷ்டோத்ர

# தசசதவெண்பாமாலை

இஃது

A. சின்னைய்யா முதலியார்

அவர்களால்

இயற்றியதை

சென்னை-சூளை.

...ப் இந்தியா பிரஸ்ஸில்

...க்கப்பெற்றன.

...913

Q25:3g8.21497K.
N13.
170484.

ஓம்.

கடவுள் துணை.

# சாற்றுகவிகள்.

## கோயிலூர் ஸ்ரீமத் வீரப்பஞானதேசிகர் மாணாக்கர், * ஸ்ரீமத் அண்ணாமலை சுவாமிகள் இயற்றியது.

திருநெல்லையம்மை திருப்புகழைத்தேர்ந்து
பெருமன்பிற்போற்றினன் பேணுந்—திருநெல்லைக்
கும்பாபிஷேகங்குறித்துவந்த சென்னைவாழ்
நம்பிசின்னை யாக்கவிஞனடு.

## கோயிலூர் ஸ்ரீமத்வீரப்பஞான தேசிகர் மாணாக்கர் காசி. ஸ்ரீமத் சுப்பய்யாசுவாமிகள் இயற்றியது.

வெண்பாப்புலியெனவேவி யாசர்பாடித்தவனை
பண்பாப்புகழுவரிப் பாருள்ளோர்—நண்பாக
யாமவராலேயியற்றும் யாப்பொன்றைக்கேட்டபினம்
ஏமமுமுதுங் கைத்துவிட்டதேன்.

## கோயிலூர் அடியார்களி லொருவராகிய ஸ்ரீமத் நாகலிங்கசுவாமிகள் மாணாக்கர் கண்டனூர் நா-பெ-நா-மு, ம-ா-ா-ஸ்ரீமுத்துராமய்யா அவர்களியற்றியவெண்பா.

அஷ்டோத்ரவெண்பா வருள்நெல்லைநாயகிமேல்
இஷ்டமுடன் செய்தே யேத்தினன்—பட்டணத்தே
சின்னையா வென்னுமொரு சீமான் செவிக் கின்பாய்
நன்னலமே செய்ய நயந்து.

---

* ஷை அண்ணாமலைசுவாமிகள் இப்போது மடாதிபதியா யிருக்கிறார்.

# திருநெல்லைநாயகிபஞ்சகவெண்பா.

## இந்தியா க்ஷேமமுற்று இந்தியர் விருத்தியடைய வேண்டிக்கொள் விண்ணப்பம்.

காப்பு.

உள்ளந்தனில் விளங்கு முத்தமனை நாடிடவே
கள்ளவினை நீங்கிடுமே காண்.

வெண்பா.

கும்பமுனி [illegible]ளையாற்கோன்சுவேத புண்யனுமே
அம்புவியிலன்னமதை யன்பருக்கே—தம்புதல்வன்
ஈயமுத்தியேபெற்ற விக்கழனிவாயல்வாழ்
தாயே துயரொழிப்பாய் சார்ந்து. 1

சாக்ரசொப்பனச்சுழுத்திச் சக்கரங்களைச்சார்ந்து
தாக்கப்பட்டேழை தயங்காமல்—சாக்கியெனும்
என்னிலையிலேநிற்க வெம்மைநெல்லைநாயகியே
உன்னுடைய கண்பாருவந்து. 2

பொல்லாக்குணமாம் பொறாமைமுதற்றுற்குணங்கள்
எல்லாமேநீங்கியே யிந்தியர்கள்—நல்லாராய்
ஒற்றுமையுற்றேயென்று மோங்குமிந்தியாக்ஷேமம்
பற்றிவாழச்செய் பரிந்து. 3

இந்த்யாமுறையீட்டை யெல்லாருமேயோதிச்
சிந்தைதிடம்பெற்று க்ஷேமமுற—உந்தன்
கடைக்கண்ணாற்பார்த்துக் கடாக்ஷித்தேயென்றும்
தடைகளெலாம் நீப்பாயேசார்ந்து. 4

பூர்வகாலச்சுகத்தைப் பூரணியேயிந்தியர்க்குச்
சீராகவேயீந்து தெய்வபயம்—பார்தனிலே
உண்டாக்கிச்செய்கார்ய மூக்கமுடன்செய்துய்ய
அண்டையிலேநின்றே வாழாய்ந்து. 5

கீலக௵ ஆடிமீ 24உ வெ-ரோகணி-24-7-08.

கருணாநிதி யென்னுங் காருண்ய மானே
தருணமிதுவென்றே தாழ்ந்தேன்—பொருள்மிகுந்த
நாட்டுக் கோட்டையரால் நற்சாலைகை கூட்டித்
தேட்டமுடன் வாழச்செய் தேர்ந்து.

---

கோவிலூர் மடாதிபதி

## ஸ்ரீமத் அண்ணாமலை ஞானதேசிகர் அவர்கள்

வாழ்த்து கவிகள்.

சீர்வளருங்கோவிலூர் திவ்யதலந்தனிலே
பேர்வளரவேவிளங்கும் பேரறிஞன்—சீர்மடம்வாழ்
ஆண்டவன்சந்ததியாம் அண்ணாமலைசாமி
ஈண்டென்றும்வாழ்வா யிசைந்து, 1
அம்பாள் மேற்பாடி லகமகிழ்ந்தே பொன்னை
இம்பரினாலேகொடுப்பாளென் றுரைத்தாய்—நம்பியே
நூற்றுபதினெட்டுகவி நுண்ணறிவாலேசெய்து
சாற்றினேனே யின்றுசார்ந்து, 2
அச்சிட்டனுப்ப * வளவில் தடைநேர்ந்து
இச்சகத்திலேவாடி யேழையேன்—அச்சமுற்று
ஓரணுயாசித்தே யூக்கமுடனப்பொருளால்
தீரமுடனச்சிட்டேன் தேர்ந்து. 3
பூரவுற்சவத்திற்குள் புண்ணியனே யானனுப்பத்
தீரந்தனையுற்றுத் தேர்ந்ததனால்—சீராக
அங்கீகரித்தேநீ ரம்பாளுக்கே செலுத்திச்
சங்கையின்றிச்சாலை செய்வாய்சார்ந்து. 4

சாதுசங்கசாலையினைச் சார்பாய்நீகைகூட்டில்
தீதகன்றவுன்கூட்டச் சீரடியார்—சாதகமாய்
வந்துதங்குதற்கே வசமான மாவிடயாய்
அந்தமுட னேயிருக்குமால். 5
ஆகையினாற் சென்னையின்க ணன்பாகச் சாலையினைத்
தீதகலவேகட்டிச் செஞ்சொல்லார்—காதலுடன்
வந்துதங்கவேசெய்து வல்லான் பெருவெளியில்
சிந்தைமகிழ்ந்தே வாழ்வாய்சேர்ந்து. 7
கும்பாபிஷேகத்திற் கொள்ளையாயன்னமதை
அம்பாள்முன்னேயளித்த வாண்டவனும்—எம்பெருமான்
சந்ததியெல்லாம்வாழி சார்கோயிலூர்மடமும்
நிந்தையின்றிவாழி நிலைத்து,

முற்றும்,

---

* அளவில்தடை இத்தடை விரிக்கில் பெருகும்=இது வரையில் செலவான பணத்தினால் மடம் கட்டிவிடலாமே என்வீணாய் மேலும்மேலும் அச்சிடுகிறாய் யார்உன் கவியை கவனித்துப் பொருள்கொடுக்கப் போகிறார்கள் கவி 1 க்கு 10-ரூபா கொடுத்தாலும் எவ்வளவோ தொகையாய்விடுமே என்று குன்றக்குடியில் கோவிலூர் ஆதீனம் ஸ்ரீமத் முருகானந்த சுவாமிகள் கூறியதுபோல இவ்விடம் பலர்கள் கூறி பரியாசிப்பதுடன்- அச்சாபிசர் ஒருவர் இந்தியா குடிகள் முறையீடு விலையாகாமல் வேறுநூல் அச்சிடுவதில்லை என்று எழுதிக்கொடுத்து இப்போது அம்பாள்மேல்செய்தகவிகளை எப்படி அச்சிடுவாய் என்று தடுத்து. சிலகாலம் பொறுத்து வீாக்குபலிதம் என்பதைக் கவனித்துஅச்சமுற்று தன்போலொத்தவரிடம் உதவிபெற்று அத்துடன் நூலாசியர் ஒருவராய்ச் சேர்ந்து அச்சிடுவென்று 5ரூ கையொப்பமிட்டனர்.

ஓம்

கடவுள் துணை.

இந்தியா கவிரத்ந மஞ்சரி நே-6.

# கோவிலூர் திருநெல்வல நாயகி

அஷ்டோத்தர

# தசசதவெண்பாமாலை

காப்பு.

வாழ்வையளிக்கின்ற வன்னிவிநாயகரை
ஊழகலவேதொழுவோ மோர்ந்து.

சுப்பிரமண்யர் துதி.

சூரன்றனை வதைத்த சுப்ரமண்யசாமி யெனுங்
காரணனைப் போற்றிடுவோங் காண்.

கொற்றவாளீசர் துதி.

கோவிலூரில்வாழுங் கொற்றவாளீசனையே
தாவித்துதிசெய்வோம் தாழ்ந்து.

நூல்.

முறையீடு.

## செனனமரண துக்கநிவிர்த்திவேண்டுகோள் விண்ணப்பம்.

வெண்பா.

சீர்பூத்தவல்லபம்வாழ் தேவிநெல்லைநாயகியே
ஏர்பூத்தநின்னடியை யெஞ்ஞான்றுங்—கார்பூத்த
ஏழைதுதிசெய்தே யின்பநிலையேயடைய
ஊழையொழிப்பா யுவந்து. 1

சுந்தரிசவுந்தரியே தூயமணிவிளக்கா
யெந்தனுளத்தேயோங்கு மீஸ்வரியே—சிந்தையற
ஞானநிலையேயருளி நாடோறுநாட்டமுற்று
மோனமடையச்செய் முனைந்து. 2

காமக்ரோதாதிகளாற் கல்லேன் மிகமெலிந்து
நேமந்தனைவிட்டேனிர்மலியே—தீமையெனும்
பொல்லாக்குணநீங்கிப் பூரணநோக்கேயுள்ள
நல்லார்பபற்சேரச்செய் நன்கு. 3

நிர்விகாரியாய்விளங்கு நித்யபரிபூரணியே
சர்வசாக்ஷித்தாயே தயாபரியே—கர்வமதை
நீக்கியருள்செய்து நின்னடியார்பாற் சேரும்
பாக்கியனாகச்செய் பரிந்து. 4

சமிவனக்ஷேத்ரம்வாழ் தாயேயென்குற்றம்
க்ஷமித்துமெய்ஞ்ஞானியர்பாற்சார்ந்தே—உமைப்போற்றும்
வாக்களித்தேயெஞ்ஞான்றும் வாழ்வாம்பெருவெளியில்
தாக்கற்றுநிற்கச்செய் சார்ந்து. 5

செட்டிப்பெண்ணிற்காகச் செந்நெல்வயலையே
கட்டியே காத்துக் களிகூர்ந்து—பட்சமுடன்
அம்மாதுத்தாய்கொணர்ந்த வன்னமதையேயுண்ட
அம்மையே யுண்மையருளாய்ந்து. 6

மண்ணாய்ப்புனலாகி மாகனலாய்க் காலாகி
விண்ணாகியேவிளங்கும் வித்தகியே—கண்ணோர்
போற்றும்படியான பூரணியே யெந்தன்மேற்
சாற்றுவா யுன்னோக்கைச் சார்ந்து. 7

அன்னையுதரத்தழுந்தி வதையாமல்
என்னிலையைநாடி யிருந்திடவே—முன்னை
வினைகளையெல்லாநீக்கி வித்தகியே தாயே
நினைவிற்குடிகொள்வாய் நீ. 8

தெரிவன்றியில்லை செகத்தென்றார் மேலோர்
தெரிவோவிளங்கவில்லை தேவி—தெரிவையே
கண்டுநிலைக்கக் கடையேனுக்கே யருளி
பண்டை வினை நீப்பாய் பரிந்து 9

இந்திரியச்சேஷ்டையினா லேழைமிகவாடிப்
புந்திதடுமாறிப் புலம்புகிறேன்—சிந்தை
தெளியும்படிச்செய்து தேவியருளில்
ஒளியும்படிச்செ யுவந்து. 10

தெரிவிமயமாகித் தேசிற்சிறந்த
பெருவெளியாய்நின்றிடவே பேயேற்—கருள்செய்வாய்
தாயேதயாபரியே தஞ்சமென்றவேழைக்கு
நீயே துணையென்றேனே. 11

கண்ணாடிபோலறிவைக் காண்பதுவே ஞானமென்று
உண்ணாடினோரெல்லா மோதுகிறார்—கண்ணாளர்
கூறுவது போலவே குற்றமுளே னுங்கண்டு
தேறும்படிச்செய் சிறந்து. 12

அறிவின்விகற்ப மனைத்துலகமென்றே
தெரிவுடையோர் செப்புகினுந் தேவி—அறிவையே
கண்டாலன்றோசுகமாய்க்காணுலகம் பொய்யென்று
விண்டிடுதற்காகும் விரைந்து.

கடந்தோறுமுள்ள கனவெளிபோல் நிற்கும்
உடல்தோறுமுள்ளவொளியைத்—தடையின்றி
காணிற்சுகமுறுவாய்க் காணாயேற்றுன்பமென
மாண்புடையோர் கூறுகின்றார் மற்று. 14

கடந்தோறுமுள்ள கனவெளியைநோக்கக்
கடந்தோன்றவில்லையது கண்கூ—டிடந்தோறும்
உள்ளவிளக்கமதை யூன்றியே காண்பதற்குக்
கள்ளவினை நீங்கவில்லை காண். 15

சித்தசுத்தி என்னும் சாதன சதுஷ்டய மடையச்
சாதுக்களைப் பூசிக்கச் சாதுசங்க சாலை
கைகூட வேண்டுகோள் விண்ணப்பம்.

ஆகையினாற்றாயேநா னன்பர்பணிசெய்து
தாகமுடன் * சாதனநான்கேயடைய—யோகமுள
சத்துக்களைச்சேர்த்துச் சற்சங்கஞ்செய்தற்கே
இத்தலத்திலே முயன்றேனே. 16

ஊற்றுள்ளநீரோடுயர் நெல்வயல்கள்
நாற்றிசையுஞ் சூழ நடுவினிலே—வீற்றிருக்குஞ்
சாலிவாடீஸ்வரியாந்தாயே குறையுள்ளேன்
பால்நிற்பாயென்றும் பரிந்து. 17

---

* சாதனம் நான்கு-நித்தியா நித்திய வஸ்துவிவேகம். இகமுத்திரார்த்தபலபோகவிராகம், சமாதி சட்க சம்பத்தி முமுக்ஷுத்வம்.

அக்குறையாதென்னிலடியேன் சென்னைப்பதியிற்
தக்கவரைப்பூசிக்கச் சாலையொன்றை—அக்கரையாய்ச்
செய்யும்படியாகத் தேவியே நீயுவந்து
வையகத்தில் கைகூட்டு வந்து. 18

---

## கோவிலூர் திருநெல்லை நாயகியின் கும்பாபிஷேகச்சிறப்பு.

கோயிலூர்ஞானக்குணக்கடலாந் தூயோராந்
தாய்போன்றமேலாந் தயாபரருன்—கோயிலினில்
கற்பக்கிரகங்கணக்காய்க் கைங்கரியஞ்
சிற்பிகளாற்செய்வித்தார் தேர்ந்து. 19

கருணாநிதியென்னுங் காருண்யமேலோன்
தருணமிதுவென்றேதாமே—பெருமையுள
கல்யாணமண்டபங்கண்ணிற் காணும்பணிகள்
பல்லோராற்செய்தார் பரிந்து. 20

வீரப்பசாமியெனும் வித்தகருமன்னோர்கள்
கோரப்பட்டக்கருத்தைக் கூர்ந்துணர்ந்து—சேரப்போய்
பூரணமாய்ப்பூர்த்தித்துப் பொல்லாவினைநீங்கிக்
காரணராணரே காண். 21

அலங்காரப்பந்தல்க ளற்புதமாய்நாட்டித்
துலங்கும்வால்ஷெட்குளோப் ஜோடித்—தலங்காரப்
புஷ்கரணிதன்னிற் புலவரெலாங்கண்டே
இஷ்டமுறச்செய்தா ரிசைந்து. 22

முத்துராமலிங்கமுனிவன் கோயிற் சுற்றிப்
பத்தியுடன் மண்டபங்கள் பற்பலவாய்—எத்திசையும்
போற்றும்படியாகப் பூர்த்தித்துப்பிர்மசபை
ஆற்றலுடன் கட்டுவித்தா ராய்ந்து. 23

நாற்றிசையு மக்ராரம் நன்ருக வேகட்டிப்
போற்றுகின்ற புண்ணியராம் பூசுரரை—வீற்றிருக்கச்
செய்தே யவர்கட்குச் சீரா யமுதளித்துக்
கைதவமெல் லாநீத்தார் காண். 24

மூன்றுவே தங்களையு மூதறிஞ ராயோதுஞ்
சான்றினராம்பிள்ளைகட்குத் தாகமுடன்-மூன்றிடத்துந்
தேவகோட் டைக் கணுள * தீரர்மூ வர்கட்டிப்
பாவமறப் போற்றுகிறுர் பார். 25

அண்ணு மலையி லரியமழை பெய்ததுபோல்
எண்ணும லிங்நாட்டிற் கேற்றமழைக் †—கண்ணுளர்
புண்ணியத்தி ஞலேயே பூரணமாகச்சொரிந்து
மண்ணுங் குளிர்ந்ததுவே மற்று. 26

ஐந்தாறு நாள்யாக மந்தணராற் செய்வித்தே
சிந்தைகளித் தன்பருடன்சீராக—நிந்தையின்றிக்
கும்பாபிஷேகங் குறைவின்றி யேநடத்தி
அம்பாளுனைத்தொழுதா ராய்ந்து. 27

---

* தீரர் மூவர் - தேவகோட்டையைச்சார்ந்த 96 - நகத்ரத்தார்களில் காரைக்குடியார் கட்டினதுருக்வேதபாராயண பாடசாலை. கோட்டையூரார் கட்டினது எசுர்வேத பாராயணபாடசாலை. அரிமளத்தார்கட்டினது சாமவேதபாராயண பாடசாலை. † கண்ணுளர் = ஸ்ரீவீரப்பஞான தேசிகர்.

அளவில்லா தாருக்கே யன்னமதையீந்தே
உளங்களித்தேயென்றுமுயர்வாய்க்—களங்கமின்றி
நல்லடியார்கூட்டமுடன் நானிலத்துங்கீர்த்தியுற்று
நல்லவரமும்பெற்றார் நன்கு. 28

பூரிவஸ்தி ரங்களையே பூரணமா கக்கொடுத்துக்
கோரியவாறேமுடித்துக் கோதற்றுத்—தேரியே
மெய்ஞ்ஞானமாஞ்சுகத்தை மேன்மேலுமேயடைந்தே
அஞ்ஞான மேநீத்தாராய்ந்து, 29

சிங்கேரிப்பீடம் ஸ்ரீமத்பரமஹம்ஸ சங்கரபகவத்பாதாசார்ய சுவாமிகள் கர்மபக்தி காண்டங்களைத் தழுவிய விசேஷம்.

சிங்கேரிப்பீடம்வாழ் தேசிகனுஞ்சங்கரராம்
எங்குங் குருவான வெம் மிறையை—இங்கே
உழைப்பில்லா வேழைக் குணர்வையேயூட்ட
அழைப்பித்தாரன்பாக வாய்ந்து. 30

சங்கரா சாரியருஞ் சற்சனரோ டேசேர்ந்து
இங்கே வந்தன்பாக வீஸ்வரியே—சங்கையின்றிக்
கும்பாபி ஷேகத்திற் கூட்டங்க ளிற்சேர்ந்தே
அம்பாளென்றே தொழுதா ராய்ந்து. 31

ஆசார்யசாமியுமே யாசான்ற னுற்சவத்தை
ஆசாரமாய் நடத்தியன்பாக—வீசாவென்
றேத்திப்பணிந்திட்டே யீரிரண்டுவீதிகளுந்
தோத்திரஞ்செய் தேநடந்தார்தோய்ந்து 32

கண்ணீருடனுங் கரத்தாளத் தோடுமே
பண்ணொடுநாமாவளியைப்பாடியே—விண்ணொளிய

நாடிப்ரதக்ஷிணையாய் நற்சங் கரவிஜயம்
பாடியேவந்தார் பரிந்து. 33

அத்வைத ஸ்தாபிதரா மாசார்ய சாமியெனுஞ்
சித்தநிலைக் கப்பெற்ற தேசிகனும்-பத்தியுடன்
பூசையாதி யெல்லாம் பொறுமையா கப்புரிந்தே
ஆசையுடன் பூர்த்தித்தா ராய்ந்து. 34.

அம்மா னுடனறிஞ ரவ்வாறு செய்கையினில்
இம்மானுடர்பலர்களென்ன கற்றுப்-பெம்மானென்
றேத்திப்பணியாமலிவ்வடிவமேமயமாய்
நாத்திக ரா யானார்க ணன்கு. 35

சாதனசதுஷ்டய மென்னும் சித்தசுத்தி யில்லாதவர்கள்
கர்மபக்தி காண்டங்களைக் கைவிடுதல் குற்றமெனல்.

சித்தசுத்தியில்லாமற் சீர்வேதாந் தங்கற்றுப்
பத்திசெய்வோர்தன்னை பழித்திட்டு-முத்தரைப்போல்
மேல்வேடத்தாலேயே *-மெல்லியரையேமயக்கித்
காலங்கழித்திடுவார் காண். 36

ஆலயங்களிற் சென்றே யன்பாய்த் தொழுவோரின்
காலந் தனையுணர்ந்த சற்றோர்போல்—சீலமுளப்

---

*-மெல்லியரைமயக்கல்-ஸ்திரீகளை மயக்கல் அதாவது ஸ்திரீகளைச் சிஷியர்யகளாகச் சேர்த்துகாலைபிடிக்க ஒருத்தி கைபிடிக்க ஒருத்தி என்று பலரைத்தொண்டு செய்யச்செய்து அவர்கள் வேடதாரி மேல்மயங்கவும் வேடதாரிஅவர்கள்பேரில் மயங்கவுமாயிருத்தல்.

பத்திமார்க்கத்தைப் பழித்துப்பலவினையைச்
சித்தியாகப்பெறுவார் சேர்ந்து. 37

வாய்ஞானமேகற்று வல்லமையாற்பத்தியினிற்
றோயுமடியார்மனதைத் தூளாக்கித்—தீயராய்ச்
செய்துவினையடைந்து தேவியேயெந்நாளுங்
கைதவத்துக்காளாவார் காண். 38

ஆகையினா லாசார்ய ராங்காங்கு யாத்திரையாய்
தாகமுடனேசென்று தக்கபடிச்—சோகமறப்
போதித்துவருகின்றார்புண்ணியர்சொல்வாக்கியத்தைச்
சாதித்தல் நன்றாமே சார்ந்து. 39

கோவிலூர் மடாதிபதி, ஸ்ரீமத் வீரப்பஞானதேசிகர்
நாட்டுக்கோட்டையார் முதலினர்கள் ஷ
ஆசார்யசுவாமிகளைப் பூசித்தவிசேஷம்.

ஆசார்ய சாமிக்கே யன்பாய்வீ ரப்பகுரு
காசாம்பொருளாற் கணக்கின்றி—ஈசாவென்
றேத்தியர்ச்சனைசெய்தே யெம்மானா சானருளைப்
பாத்திரமாகப்பெற்றார் பார். 40

ஆசார்யர் சேனைக்கு மன்னவஸ்திர சொன்னமதை
கூசாமலேயீந்து கோமளிலையைப்—பேசாமற்
பெற்றே சுகமாகப் பேரருளையேநாடி
நற்றவத்தரேயானார் நன்கு. 41

நாட்டுக்கோட்டைப்பதியார் நாலாறுநூறாக
தேட்டமுடனர்ச்சனையே செய்திட்டு-வாட்டமெலாம்

நீங்கும்படியாக நேராகவேபணிந்தார்
ஓங்கிச் சுகமுறுவா ரோர்ந்து. 42

திருவண்ணாமலை ஈசான்யமடம் மடாதிபதிசதானந்த சாமி என்னும் ஸ்ரீ மத் சாத்தப்ப சுவாமிகள் இந்நூலாசி யரைக்கண்டு சாதுசங்கசாலைகைகூடுங் காலம் நேர்ந்ததெ ன்றுகூறிக்கோவிலூர் கும்பாபிஷேகத்திற்கு அழைத்தபடி ஷை நூலாசிரியர்செய்த யாத்திரைவிசேஷம்.

சாத்தப்பசாமியெனுஞ்சற்சனரு மேழைநிலம்
நீத்தோர்க் குரியதென நிச்சயித்துப்—பாத்திரராம்
கோயிலூராதினராற் * கொள்கைமிகக்கூடுமென்றே
நாயினேற் கேயுரைத்தார் நன்கு. 43

உரைத்த படியவரு முன்மஞ்சனத்திற்
சிரத்தையுடனழைத்தார் தேவி—ஒருத்தனாய்
சென்னையினையேவிட்டுச் சீர்மயிலத்தேசென்றே
பன்னிமுறையிட்டேனே பார் 44

முறையிட்ட தன்பின்னர் ‡ மூதறிஞ ரூழாஞ்
சிறைமீட்ட தேசிகர் முன் றேவி— ० பறையறைந்து

---

* கொள்கை =18-வது பாடலில் கூறிய சாதுசங்கசாலை கைங்கரியம்.

‡ மூதறிஞர் நற்கீரதேவர்.

० பறையறைந்து =மயிலம் முருகன் சந்நிதியில் வெகு சனங்கள்முன் ஷை கைங்கரியத்தைபற்றி சிலகவிகள் பாடப் பட்டன.

ஆடுநட ராஜன்ற னம்பலத்திற் சென்றுன்னை
? நாடுவரைத்தேடினனே நான். 45

பொன்னம் பலர்மடத்தே பூரணியே யாருமின்றி
என்னவிதங் கோவிலூ ரேகுவதென்—றெண்ணியே
சித்ராபர் வத்திற் றிருமுருக னைப் ¶ போற்றப்
பத்தன்சிறுவன் வந்தான் பார். 46

வந்த சிறுவனுமே வாபோவோ மென்றழைக்கச்
சிந்தை திடமுற் றுச் சேயேனும்—நிந்தையின்றி
அப்பிள்ளை யோடே யகங்களித்தன் பாய்ச்சேர்ந்தே
செப்பியேவந்தேன் சிறந்து. 47

இருவருமே ரெயிலினி லின்புற்றேயேறிப்
பெருவழி யெல் லாங் கடந்து பின்னை—அருந்தாங்கி
வந்திறங்கித் தங்கியே வல்லமையாற் சாக்கோட்டைச்
சிந்தைமகிழ்ந் தேவந்தோஞ் சேர்ந்து. 48

அங்குள்ளசாதுவினை யன்பாகப்பூசித்தே
தங்கியபின் காட்டினையே தாண்டுமுனம்—எங்கள்பின்
கள்ளன் தொடர்ந்ததினல் காருண்யத் தாயேநான்
* உள்ளங்கலங்கலுற்றே னோர்ந்து. 49

---

?நாடுபவர்=சிதம்பரம் ஸ்ரீமத்பொன்னம்பலஞானதேசிகர வர்களின்மடத்தின் தலைவர் ஸ்ரீகாசிவாசிசிதம்பரசுவாமிகள்.

¶ போற்ற=திருமுருகாற்றுபடை ஜபிக்கப்பட்டது.

* உள்ளங்கலங்கல்=குடல்வாத நோய்க்காக நூலாசிரியர் இடுப்பில் அணிந்திருந்த சீமைபித்தளை வில்லானது

திருமுருகாற்றுப் படைகாப்பின்மகிமை.

திருமுருகாற் றுக்காப்பைச் சிந்தித் திருக்கப்
பெருமையுள † தீக்ஷதரும் பின்னால்—இருசக்ர
வண்டியிலேவந்து வழிகலந்தேயன்பாகத்
தொண்டர்போலேயழைத்தார்தோய்ந்து. 50

அழைத் தவவரோடே யளவாய் நடந்து
பிழைத்தோமென்றேகூறிப்பின்னால்-தழைத்திருக்கும்
காட்டைக் கடந்திட்டுக் காரைக்குடி சேர்ந்து
பாட்டையா யூர்வந்தோம்பார். 51

கோவிலூர் திருநெல்லை நாயகிகொற்றவாளீசர் ஆலயங்களையும் ஸ்ரீமடாதிபதியையும் தெரிசித்துகும்பாபிஷேகத்தில் கொற்றவாளீசர்தோத்திரம்வாசித்துஷை மடாதிபதிஸ்ரீவீரப் ஞானதேசிகர் சந்நிதியிலளித்துபிறகுகளத்தூர்கும்பாபிஷேகத்தில் ராமநாத ஈஸ்வரன் பேரில் பாடியனுப்பினதையும் ஷை ஞானதேசிகர் கவனியாததைக்குறித்து நூலாசிரியர்வருத்தமுறல்-

உன்னாலயங்கண்டே யுள்ளங்களித்தேத்தி
மன்னேனுந் தேசிகனை மாசற்ற—அன்னையெனப்
போற்றி நமஸ்கரித்தே புண்ணியா வாட்கொளென
சாற்றினேன் கைகூப்பிச் சார்ந்து. 52

---

பொன்போல் பிரகாசித்திருந்ததில் பொன்னென்று திருடர்பிராந்தியுற்று கொன்று விடுவாரென்று பயந்தோன்றி மனநடுக்கங் கொள்ளலாகியது.

† தீக்ஷதர்=சிதம்பரம் பிரமஸ்ரீ சங்கரதீக்ஷதர்.

தேவக்கோட்டைப் பதியார் தேசிகன்செய் மஞ்சனத்தில்
தேவன்மேற் பாடியதோர் ¶ சீர்நூலை—ஆவலுடன்
சாதுக்கள்முன்வைத்துத் தாழ்ந்து மவர்பார்த்துத்
தீதகலச் செய்யாதென் றோர்ந்து. 53

களத்தூரின் மஞ்சனத்திற் காதலுட னெந்தன்
உளக்கருத்தை நற்கவியா லோதி—விளக்கி
எழுதியதி லக்குறையே யெம்மான் மனதைப்
* பழுதுறவே செய்த தென்ன பார். 54

கற்பகத்தைச் சேர்ந்தோர்க்குக்காஞ்சிரங்காயீய்ந்ததெனின்
மூற்பவத்திற்செய் தவினை மூண்டதெனப்—பொற்பிளவோர்
கூறியது போலவே கோதிலான் றன்மனது
வேறுவிதமாகியதோ வோர்த்து. 55

கோ-சி-ஸ்ரீ பொன்னம்பல ஞானதேசிகரவர்கள் இந்நூலாசிரியர் நேரில்கொடுத்த புத்தகங்களை வாசித்துச்சந்தோஷித்து, இவர் குறைகளைத் தீர்க்கும்படிகோ-ஸ்ரீ வீரப்ப ஞான தேசிகரவர்களுக்கு சிபாரிசு செய்து பிறகுதான் தேகசவுக்கியமில்லாத காலத்திலும் இவரனுப்பியநூல்களை யெல்லாம் பிரியத்துடன்வாசித்து, சந்தோஷித்து தனது மாணாக்கர்களை கடிதம் எழுதக்கூறியும் அவர்களனுப்பாததிலும் இவர் போவதற்குள்ளாககாலமாய் விட்டதிலும் மனைவியாகூலத்திலாழ்ந்தது.

பொன்னம் பலசாமி புண்ணியருக் கக்கருத்தைப்
பன்னிப் பலநூலாய்ப் பாடிவிட—அன்னவரும்

---

¶ சீர்நூல் = கொற்றவாளீர் தோத்திரம்

* பழுதுறச்செய்தல் = மனவருத்தமுண்டாக்கல்.

யார்த்துக் களித்திட்டுப் பார்மீதி லென்குறையை
தீர்த்திடுவே னென்றதென்ன செப்பு. 56

களித்திட்டதோடுமே ‡ காருண்யமானும்
களிக்கும்படியோதி ᴏ கற்றோர்க்—களிக்கவே
கூறியேசெட்டிகட்குங் ? குற்றமிலாப்புத்தகத்தை
தேரியீயென்றனரேசேர்ந்து. 57

மூன்றுவரு டச்சுரத்தால் மூதறிஞர் தேசிகராம்
சான்றினரைக் காணாமற் சார்நூலே—நான்றான்
அனுப்பியதைப் பெற்றே யன்பாக வாசித்
தனுப்புலெட்ட ரென்ற தென்ன வாய்ந்து. 58

அடிக்கடியும் வாசித் தகமகிழ்ந்தே யென்னைச்
சடிதி யழையென்றே தானே—படிமீதிற்
கூறியுமேமாணாக்கர்குற்ற மின்றி * நற்கடிதமே
தேரியெழுதாததேனோ செப்பு 59

பூரணமாய்விட்டரெனப்புண்ணிய வண்ணாமலையில்
காரணியே கேட்டுக்கலங்கியே—ஆரணனை

---

‡ காருண்யமான்—ஸ்ரீ வீரப்பஞானதேசிகர்.

ᴏ கற்றோர்=வித்வான்கள்.

? குற்றமிலாப் புத்தகம் இளமையாக்கினார் தோத்திரம்
கோவிலூர் ஆதினர்தோத்திரம்.

ஏ சார்நூல்=இளமையாக்கினார்தோத்திரம் நெ-2
கொற்றவாளிசர்திருவிலேமாது தோத்திரம்.

நிந்தித்து நாடோறும் நீங்காத் ‖ துயராற்
சிந்திப்பதுநன்றோ செப்பு. 60

பூரண மானபினர் பொல்லை ணவரையே
நாரணனென் றேதொழுது ‡ ந[illegible]விகள்—தீரமுடன்
செய்தேயளித்திட்டுந் தேசிகன்வீரப்பகுரு
ஐயனவர் பாராதெனுய்ந்து.

அண்ணாமலை யான்மேலன்பாகவேபாடி
○ கண்ணார்முன்வைத்துக் கண்டுமே-உண்ணாடி
நோக்காததென்னவவர் நுண்ணறிவோர்போதகமே
காக்கக்கடனுனக்கே காண். 62

திருநெல்லை நாயகி மண்டலாபிஷேகப்பூர்த்தி

கீலகவாண்டானகீர்த்தியுள நல்ரிஷபம்
நாலேழாந்தேதிரண்டு நாளினிலே—சீலக்
குருவாரஞ் சோதிக் குண பூர்வபக்ஷம்
இருசஷ்டி யாந்திதியி லிங்கு. 63

---

* நற்கடிதம்=சிதம்பரம். திருவண்ணாமலை
கோ-சிதம். குரோதிஹு கார்த்திகைமீ 22 உ.
இப்பவும் தங்கள் கார்ட்கிடைத்தது ஏர்க்கனவேதாங்கள் பொஸ்தகம் இவிடத்திற்கு அனுப்பிக்கொண்டிருக்கும்போது ஷ புத்தகங்களை ஸ்ரீ, சுவாமிகள் அடிக்கடிபார்த்து ரொம்பவும் சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தார்கள் அவர்கள்தங்களைப் பார்க்கவேணு மென்றுசொல்லிக்கொண்டு கடிதம் எழுதவும் உத்திரவாச்சு அந்தப்படிஎழுத தங்கள்மேல்விளாம் பூர்த்தியாய் தெரியாததால்யெழுதவில்லை ஷ சுவாமிகளை மடத்தில்தான் அடக்கம் செய்தது மறுபடியுமடத்துக்கு இன்னம் ஒருவர்களும் ஏர்ப்படவில்லை ஸ்ரீ மது கோவி

மண்டலாபிஷேக மறையோரால் பூர்த்தித்துத்
தொண்டராம்வீரப்பதூயவரும்—எண்டிசையும்
வாழ்த்தெடுக்கப்பெற்றார் மகிழ்ந்தன்னோர்யான்விரும்பும்
தாழ்விலாச்சாலைசெயச் சாற்று. 64

## ஆடிப்பூர உற்சவ விசேஷம்.

ஆடிப்பூரந்தனிலே யற்புதமாயுற்சவத்தை
நாடியேசெய்து நலமடையத்—தேடித்
தெரிசிக்கவேவந்த சீரடியார்க்கெல்லாம்
அறுசுவையோடன்னமிட்டாராய்ந்து 65

காலையுற்சவத்தைக் * கணக்காகவேநடத்தி
சீலமுடன்தெரிசித்தார் சீடரோடு—மாலையினில்
பத்துமணியின்மேல் பலபக்தர்கூடியபின்
சித்தமகிழ்வாய்ச் செய்தார் சேர்ந்து 66

---

னூர் சுவாமிகள் ஏர்ப்படுத்திய பின்பு தெரிவிக்கிறோம். வேணும் சற்குருநாதன் துணை

‡ நற்கவிகள் = ஸ்ரீமத்பொன்னம்பல ஞானதேசிகர்பரிபூரணமாலை 100 கவிகள்.

o கண்ணாளர் ஸ்ரீவீரப்பஞான தேசிகர். பாடி = அண்ணாமலையார் கும்பாபிஷேக தோத்திரம்.

* கணக்காக நடத்தினது = காலையில் 7 - மணிக்குள் அம்பாளுக்குத் தீபாராதனைசெய்தும் அம்பாள் கோபுர வாயல்தாண்டியபின் அம்பாள் முன் 1-வது பறைமேள வாத்தியம், 2-வது கொடிகொடைகள் 3-வது ஆனைகள் 4-வது சங்கீத வாத்தியம், 5-வது, அம்பாள் அம்பாளின் இரண்டு

சீமைபகல்வத்தியொடு தீவத்திகளேயே
யாமரர்கள்பாலீய்ந்து பண்பாக—நேமமுடன்
கைக்கொண்டேகச்செய்து கண்சாக்ஷியாய்நடத்தி
தக்கநிலைக்காளானார்தான். 67

பத்துநாளுற்சவத்தைப் பார்புகழவேசெய்து
சித்தமகிழ்வுற்றார் தேவியே—எத்திசையும்
இவ்வாறுமுற்சவத்தை யெந்நாளுங்கண்டதில்லை
செவ்வையாகப்புகல்வேன்றேர்ந்து. 68

### கோ-ஸ்ரீமத் வீரப்பஞானதேசிக ரவர்களின்

#### காலக்கழிவு.

வெகுகாலமோனமுற்றேவித்தகியேநாளைத்
தகுதியாகக்கழித்ததக்கோன்—மிகுதியாய்
கோயில்விவகாரங் குற்றமறவேநடத்தி
தாயர்னுன்செட்டிகட்குத்தான். 69

சட்டதிட்டமாய் நடத்துஞ் சாமார்த்ய மென்சொல்வேன்
பட்டம்பெற் றுள்ளோரிப் பாரிலே—திட்டமாய்க்
காரியத்தைச் செய்யார்கள் கட்டழகியேயவர்
வீரியத்தைக் கூறலரிதே. 70

வைதீக மார்க்கத்தில் வல்லபமுங் குன்றும்ல்
செய்கார்ய மெல்லாமே செய்துவந்து—தைரியமே

---

பக்கங்களிலும் சாதுக்களும் பக்த ஜனங்களும் நகரத்தார்களும். 6 வது, ருக்வேதபாராயணர், 7-வது, எசுர்வேதபாராயணர், 8-வது, சாமவேதபாராயணர், 9 வது, நாமாவளிபாடகர்கள், 10-வது, பஜனைசெய்பாகவதர்கள், 11-வது, இவ்வரிசைகளின் மத்தியில் ஒருவரும் போகாதபடிகாவல்காரர்கள்.

எந்நாளு மேயுற்றே யீஸ்வரியே நற்படுக்கை
சின்னுபின்னஞ் செய்தார் தேர்ந்து. 71

அறுசுவை போஜனமு மன்பாய் தனக்கென்
ரொருபொழுதுமுண்ணவிலையோதிக்—குருவெனவே
கொண்டு தொண் டேபுரிவோர் கூட்டத் துடன்சேர்ந்து
பண்டை யினனுய்ப் புசிப்பார் பார். 72

ஓர் துண்டே தன்னரையி லாக்கமுடனே தரித்து
வீரமுடனெங்கும் வியாபிப்பர்—தீரமுடன்
நாட்டுக்கோட்டைக்குரியார் நற்கோயிலின்பணிக்குந்
தேட்டமதைப் போதிப்பார் தேர்ந்து. 73

விரக்திமய மாயிருந்தே வித்தகியே தாயே
சிரத்தையுடன் செய்கார்யஞ் செய்வர்—ஒருத்தரையும்
நம்பார் நகரத்தார் நாயகரெல் லாநடுங்க
அம்பாளேயாண்டிடுவாராய்ந்து. 74

ஆசான்றன் பூசையினை யன்பரினுடோறும்
கூசாமலே நடத்திக் குற்றமற்ற—வீசாவென்
றேத்திப் பணிந்திட்டே யீஸ்வரியுன் பால்வந்து
தோத்திரமே செய்வார் துணிந்து. 75

அத்வைதக் கொள்கை யகத்தின்கண்ணே நாட்டிச்
சித்த நிலைக்காத சீடர்க்குச்—சித்தசுத்தி
வாய்க்கும் வழியினையே வண்மையுட னேயோதிச்
சாக்கி யுனையே தொழுவார் சார்ந்து. 76

தினந்தோறுஞ் சீடருடன்தேவி சந்நிதிக்கு
மனமுருகி வந்தேயம்மானே—முனம்பணிந்து
போற்றித் தொழுதேத்திப் பூரணியென்றே துதித்துச்
சாற்றிடுவார் கைகூப்பிச் சார்ந்து. 77

நமஸ் கரித்தப் பின்னரே நல்லடியார் சூழத்
தமதிடத்திற் சென்றே தயவாய்—உமைப்பணியும்
அன்பர்களுக் கெல்லாமே யாத்மார்த்தத்தை யோகி
இன்ப முறுவா ரிசைந்து. 78

பின்பு பிக்ஷையையே பிரியமுள சீடருடன்
அன்பாகவே யேற்றே யாங்காங்கே—அன்பரெலாம்
ஏகும் படிச்செய்தே யீஸ்வரி யுன்னை வணங்கி
யாகுசிஷ் டைபுரிவா ராய்ந்து. 79

முத்து ராமலிங்க முனிவ னுண்டா னன்பாய்
சித்தந் தனிற்கொண்ட சீர்கருத்தை—எத்திசையும்
போற்றும் படியாயிப் புண்யவீர சேகரரால்
ஆற்றலுடன் பூர்த்தித்தா ராய்ந்து. 80

அவ்வாறே யென்கருத்தை யம்மணியே யன்னோராற்
செவ்வையாய்க் கைகூட்டிச் சீரடியார்—இவ்வாழ்வில்
வந்துதங்கச் செய்திட்டே வல்வினையேன் றொண்டுசெய்து
சிந்தைதெளியச்செய் சிறந்து. 81

## 3-வது வேண்டுகோள் விண்ணப்பம்

காட்டுக் கோட்டையார்செய் * நன்மஞ்சனங்களிலே
தேட்டமுடனேகவிகள் செய்திட்டே—நாட்டமுடன்
கொண்டுபோ யீந்துமே கூறரியசா லைக்குப்
பண்டுதரா தென்னோ பரிந்து. 82

பற்பலநா ளன்னோரைப் பாடிப்பாடித் தந்து
நற்பலனொன் றாமின்றி நாயேனும்—துற்பலத்தைச்
சித்தந் தனிலுன்னித் தேவியே வாடுவது
இத்த லத்தினன்றோ விசை. 83

விரக ரிருவர் விளம்பிடவோ வில்லை
விரல்நிறைய மோதிரமோ வில்லை—அரைதனிலே
பஞ்சேனும் பட்டேனு மில்லையென் பாவினையை
அஞ்சே லென்றார்கொள்வா ராய்ந்து. 84

நானென்னு மாணவமு நாயேனை விட்டொழிய
ஞானமின்றியே திரிந்தே யெங்கெங்கு—மானமது
நீங்குதற்கே யிவ்வேடம் நிர்மலியே பூண்டாலும்
தீங்கில்லா ரீயாதென் றேர்ந்து. 85

சிபாரிசில் லாமலே சிமோனைக் காணல்
உபாதியென்றே தாயே யுன்னைச்—சிபாரிசு
செய்வை யென்றேநாடித் தீரமுட னிக்கவிகள்
ஐயமின்றிப் பாடினனே யாய்ந்து. 86

உலகம் பழிக்கவுட லெடுத்த தன்றி
பலமாய்த் தவம்புரிந் திப்பாரில்—நலமொன்றும்
பெற்றுய்வ தற்கில்லைப் பேரரசித் தாயேநான்
பித்தனெனவே பட்டேன் பேண். 87

---

* நன்மஞ்சனங்கள் =மகா கும்பாபிஷேகங்கள். சிதம்பரம் நடேசர் கும்பாபிஷேகம். 2-எறப்பூர்தத்துவராயர் கும்பாபிஷேகம், 3-வது காஞ்சீபுரம் ஏகாம்பரநாதர் கும்பாபிஷேகம். 4-இளமையாக்கினர் கும்பாபிஷேகம். 5-அண்ணமலையார் கும்பாபிஷேகம், ஷ யார் மண்டலாபிஷேகம். 6-திருநின்றியூர்இருதயவாலயவீஸ்வரர்கும்பாபிஷேகம். 7-கருவூர் ஆனிலை பசுபதி யீஞ்வரர் கும்பாபிஷேகம். 8-சாமிமலை சாமிநாதர் கும்பாபிஷேகம். 9-திருவானைக்கா ஜம்புகேஸ்வரர்கும்பாபிஷேகம். 10-திருநாட்டியத்தான்குடி யீஸ்வரர்கும்பாபிஷேகம். 11-கோவிலூர் கொற்றவாளீசர்கும்பா

சந்யா சிகளோடு சக்ரவர்த்தியைப் பாடி
என்னசன்மானம்பெற்றா யென்றுபலர்—பன்னாளாய்
ஏசுகிறா ரென்றாயே யெம்பாட்டுடைத் தலைவர்
காசுக ளீயாததெனோ காண். 88

தந்தை வாக்கியப்படியே தாயேமுன்னோர் போலே
சிந்தை மகிழ்வாய்க் கவிகள் செல்வர்மேல்—அந்தமுடன்
செய்து பலனில்லாமல் தேகியெனவே காத்து
ஐயோவாடல் நன்றோ வாழ்ந்து. 89

பூர்வவினை தானோ புல்லறிவே னாமவர்மேல்
சீர்கவிகளைப் பாடிச்செம் பொன்னால்—பாரமாய்
அச்சிட் டச்சிட்டீந்தே யல்லல் மிகவுற்றே
இச்ச கத்தில் வாடினனே. 90

ஈதுனக்கு நன்றல்ல வீஸ்வரியே யென்றாயே
சாதுசங்கச் சாலையினைச் சார்ந்தெவரும்—தீதகன்று
எங்கெங்கு மீந்துய்ய வெந்நாளும் போதித்துப்
பங்கமின்றி வாழச்செய் பார். 91

## 4-வது வேண்டுகோள் விண்ணப்பம்.

திருமஞ் சனந்தோறும் சேயேன் செய்நூலை
ஒருவருமே யேற்கிலையென் றுன்னிப்—பெருந்துயரம்
ஏழையடைந்திட்டபின ரெம்மை நகரத்தினரும்
தாழ்வின்றி யீயாதென் சார்ந்து. 92

---

பிஷேகம். 12—களத்தூரீசர்கும்பாபிஷேகம். 13-காளத்தீசர் கும்பாபிஷேகம். 14-திருவான்மியூர் கும்பாபிஷேகம் முதலி யன இவைகளன்றி-இளமையாக்கினாரும்-கொற்றவாளீசரும் 2-தடவை பாடப்பட்டனர்கள்.

எட்டிக்கா யேனுமே யீஸ்வரியே யென்னளும்
பட்டுப்போகா திருக்கப்பார்ப்ப துவே—துட்டகுணம்
இல்லாத நல்லோ ரியற்கையே யாதலினல்
எல்லாரும் வாழச்செ யிங்கு. 93
நாட்டுக்கோட்டையார் *நலங்குறைந் துவிட்டதென்று
வாட்டமுறுகின்றனராம் வல்லபம்வாழ்—தேட்டமுள
தேவி யவர்கட்குச் செல்வந் தனைப்பெருக்கித்
தாவிசாலை கட்டச்செய் சார்ந்து. 94

## 5-வது வேண்டுகோள் விண்ணப்பம்.

பொன்னம் பலசாமிப் புண்ணியனு ரென்குறையை
இன்னவித மென்றெடுத் துரைத்தும்—பொன்னையுள
வீரப்ப தேசிகரும் வித்தகியே நீக்குதற்குத்
தீரங்கொள் ளாததெனே செப்பு. 95
*மாசற்றோர் போன்றோர் மடமென் னத்திற்குப்
பாசத்தையே நீக்கிப் பற்றறவே—நீசற்று
நிற்கமுய லென்பார் நிர்மலியே யென்னுளத்தைச்
கற்காதவ ரலவோ காண். 96
கண்ணன் ‡ திருவாக்கைக் காதலுடனே மனதில்
எண்ணியே்யோசித்தா லென்பருவப்—புண்ணியத்தை

---

* நலங்குறைந்து விட்டது = ரங்கோனில் நகரத்தினர் நஷ்டமடைந்தனர், இப்போது சிபாரிசுசெய்ய முடியாது பின்னல் பார்ப்போம்என்று மடாதிபதி கூறினர்.

* மாசற்றோர்=பற்றற்றோர், இவர்களில் கைங்கரியம் செய்பவர்கள் இப்போதுள்ள ஸ்ரீசங்கர பகவத் பாதாசார்ய சுவாமிகள் திருச்செந்தூர் ஸ்ரீமௌனசாமிகள் கோவிலூர்-ஸ்ரீ வீரப்பஞான தேசிகர்-கோ-சி-ஸ்ரீ பொன்னம்பல ஞான தேசிகர் முதலினர்கள்.

கண்டுகொண் டேயவருங் கையிங்கரியத்தை யன்பாய்
தொண்டர்போற் செய்யென்பார் தோய்ந்து. 97

சகத்குரு வாய்வந்த சங்கரரு மெந்தன்
அகத்தையே யாய்ந்துணர்ந்தே யன்பாய்—சகந்தனிலே
சாதுசங்க சாலையினைச்சார் வியாசர் பாடியினில்
தீதகன்று செய்யென்றார் தேர்ந்து. 98

நாடுநா டாய்த்திரிந்து நாட்டுக் கோட்டையாரின்
வீடுவீடாய்ப் ? போகேன் வித்தகியே—தேடிசெலும்
உன்பேரிற் செய்தவுயர் கவிகளைக் கண்டே
அன்பா யீய்ந்துய்யச்செ யாய்ந்து. 99

சத்தியத்திற் குட்பட்டோர் தாயே யிந்நூலையே
சித்தந்தனிற் கொண்டு † சீரடியார்—பத்தருக்குப்
போதிப்போர் சொல்லையுமே பூரணமா யேற்றிட்டே
சாதித்தே யீந்திடுவார் சார்ந்து. 100

அண்ணாமலை சாமியன்பாகவம்பாள்மேல்
உண்ணடியேபாடினுன்குறையைக் ㅇ கண்ணாளர்

---

‡ திருவாக்கு=பகவத்கீதை 7-வது அத்தியாயம் 16-வது சுலோகம் கருத்து - ஓ அர்ச்சுனா திருடன், புனி, வியாதி முதலியவைகளால் சூழப்பட்டிருக்கிறவனும் சற்காரியங்களைச் செய்கிறதற்குச் சாதனமான தனத்தைக் கோருகிறவனும் தத்துவஞானத்தை யடையக் கோருகிறவனும் பிர்மக்கியானியுமான இந்நால்வர்களும் புண்ணிய சாலிகள். இந்த சனங்கள் என்னைப் பஜிக்கிறவர்கள்

? போகேன்=வயது தளர்ந்து கொதிப்பு சுரம்போராடுவதால் போகமுடியாது,

† சீரடியார்=நீ வீரப்பஞானதேசிகர்.

நீக்கிடுவாரென்ருேத நிர்மலியேசிந்தித்தே
ஆக்கினைனிக்க விகளாய்ந்து. 101
ஆகையினலே நெல்லையம்பாளே யென்குறையை
ஈகையுளவெல்லோருமீங்குணர்ந்து—தாகமுடன்
சற்சங்கசாலையினைச்சார் சென்னையிற்கட்டி
நற்சங்கமே பெறச்செய்நன்கு. 102

6-வது வேண்டுகோள் விண்ணப்பம்.

பொன்னம்பலசாமிப் புண்ணியரையேயழைத்தே
அன்னந்தனையிட்டவவ்வினையே-என்னை
மடப்பித்த ஞக்கியதோ மாசற்றதாயே
தடைவினையை நீக்கிடுவாய்சார்ந்து 103
மூப்பத்தேழாண்டின்முன் ‡மூதறிஞரேயழைத்தும்
செப்பியபோதேயவர்பின்செல்லாமல்—இப்பிறவி
தாயின்றடையாலே தமியேனுநின்றதுவோ,
சேயேன்கலங்கலுற்றேன் சேர்ந்து 104
அழைத்தபடியவர்பி னன்பாய்த்தொடர்ந்தால்
உழைத்திட்டே * யுத்தமநூலோதிப்—பிழைத்துச்
சுகமுற்றிருப்பதுடன் சுந்தரியேதாயே
அகந்தெளிந்தேவாழ்வேனுய்ந்து. 105
மெய்யடியார்தொண்டையேமென்மேலுமேசெய்து
உய்யமுயன்றதுவோ வூழ்வினையே—பையத்
தொடர்ந்துவதைத்திட்டுத் தூமணியேதாயே
இடஞ்சலேயே செயகின்றதிங்கு. 106

---

o கண்ணுளர்=ஸ்ரீவீரப்பஞானதேசிகர்
‡ மூதறிஞர்=ஸ்ரீபொன்னம்பலஞானதேசிகர்
* உத்தமநூல்=உபநிஷத்துவேதாந்தநூல்கள்.

சாதனசதுஷ்டயங்கள் சார்பாகவேயடைந்து
தீதகன்றே தீவிரமாய்த் தேசிகனுற்—போதமுற்று
உய்குவோமென்றெண்ணி யுத்தமரின்றொண்டையே
செய்யமுயன்றிட்டேனென்றேர்ந்து 107

செய்யமுயன்றிட்ட வெனைத்தேவியே தீயவினை
பையத்தொடர்ந்துவந்து பற்பலவாய்—துய்யர்பால்
சேராவிதமாகச்சேயேன் றனைவாட்டி
ஆராத்துயர்விளைத்ததாங்கு. 108

மனிதரிற் செல்வர்கள் மாத்யாகியென்றே
கனிவுடனேபாடியதைக்கண்டோர்—தனியான
மெய்யனையேபாடியே மேலாமருள்பெருவாய்
பொய்யரைப்பாடாதை யென்றூர்போந்து. 109

மடங்கிட்டவேண்டுமென்ற மாதாகத்தாலே
திடங்கொண்டேசீமானைத்தேடித்—தொடங்கியே
பொன்பெறுதற்கேயானும் பூரணியேயீஸ்வரியே
அன்புடனேபாட லுற்றேனுய்ந்து. 110

ஒவ்வோர்வடிவிலுமே யொப்பிலொளியென்றே
செவ்வையாயாய்ந்துன்னைத்தேர்ந்ததினல் - அவ்வொளியை
நாடியேபாடுகிறேன் நான்மறைக்குமெட்டாளே
நாடிப்பொன்னீயச் செய்நன்கு. 111

## 7 வது வேண்டுகோள் விண்ணப்பம்.

சிங்கேரிப்பீடம்வாழ் தேசிகன்மேற்சீர்கவிகள்
சங்கையின்றியேசெய்து தாழ்ந்திட்டே—எங்குருவே
பார்த்தருளவேண்டுமென்று பற்பலவாகப்பணிந்து
தோத்திரஞ்செய்தே யீந்தேன்றேய்ந்து. 112

சங்கராசாரியருஞ் சற்சங்கசாலையது
பங்கமின்றிக்கைகூடும் பார்தனிலே—சங்கையுற்று
சஞ்சலத்திலாழாமற் சார்பாய்முயலென்று
நெஞ்சார்ந்தகக்ஷதை யீந்தார்நேர். 113
ஆசார்யசாமியனுக்கிரகஞ் செய்தபடி
தேசாபிமானியெலாஞ் சீரடியார்—கூசாமல்
தங்கும்படியான சற்சங்கசாலைகட்டிச்
சங்கையின்றிவாழச்செய்சார்ந்து 114

## 8 வது வேண்டுகோள் விண்ணப்பம்.

உன்னுடையவன்பரெனு முத்தமர்வீரப்பகுரு
என்னுடையநற்கவியை யீங்குணர்ந்து—பொன்னுடைய
அன்பர்கட்கேகூறயம்மையே நீயோதித்
துன்பகலச்செய்யச்செய் தோய்ந்து 115
உன்சந்நிதிமடத்திலுண்ணு வோர்கள்சிந்தும்
அன்னமதைமீத்தே யடியேற்குப்—பொன்னுக்கி
யீயச்செய்தேயருளியென் குறையையேநீக்கித்
தாயேநீகாத்திடுவாய்சார்ந்து. 116

## 9-வது வேண்டுகோள் விண்ணப்பம்.

மதுப்பிரியமாமுனிவர்மாதவத்தைமெச்சி
இதங்கனிந்தே காக்ஷிதந்த வீசன்—சுதந்தரியாம்
கோயிலூரீஸ்வரியே கூறறிய ஞானநிலை
நாயினேற்கீந்தேவாழ் நன்கு. 117
திருநெல்லைநாயகியாந்தேவிநீவாழி
கருநெல்லையேயறுக்குங் கண்ணேன்—உருவருவ
மில்லாமலேநாடு மின்பமுளவீரப்பன்
நல்லார்பால்வாழி நயந்து. 118

முற்றும்.

ஓம்.

கடவுள் துணை.

# நன்றக்குடி சுப்பிரமண்யக்கடவுள் ஸ்தோத்திரம்

காப்பு.

...ாந்தனிலேயே யோங்குங்கணபதியைக்
...ளமின்றியே தொழுவோங்காண். ...

நூல் வெண்பா.

...பருகும் வையாபுரி யென்னுந் தீர்த்தமுடன்
...ர்நெல் வயல்சூழுங் கற்கலுள—ஓர்சிறிய
...ன்றக் குடிவாழ் குகனே சுப்ரமண்யனே
...ன்றென்குறை தீர்ப்பா யிங்கு. 1

...ரன்னம் பலசர்மிப் புண்ணியரா னூழான
...ன்னம் வினைவந்து மூண்டுகொண்டே—என்னை
...வதைக்கிறதே யென்செய்வேன் வல்லோய்குன்றனே
சிதைப்பதுவே நன்றுமே தேர்ந்து. 2

குன்றக் குடிவாழ் குமரகுரு பரனே
கன்றைப் போலேகலங்குங் கல்லேன்முன்—என்றைக்கோ
வந்துநீ யாட்கொண்டு வல்வினையை யேநீக்கி
சிந்தை துய ரொழிப்பாய் சேர்ந்து. 3

சற்சங்க சாலையொன்று சார்வியாசர் பாடியினில்
நற்சங்க ராற்கட்ட நான்முயன்றால்—துற்சங்க
ஊழ்வினை யெலாம்வந்தே யூக்கமதையே தடுத்துத்
தாழ்வை விளக்கின்றனவே சார்ந்து. 4

நற்கீரரைக் காத்த நல்லோனே குன்றனே
துற்குணத்தையெல்லாமே தூளாக்கிப்—பொற்குவியல்
உள்ள புண்யனுக்கிந்த வுத்தமத்தை யேயோதிக்
கள்ள மின்றியியச் செய்காண்.

கீலகஸு ஆடிமீ 1உ வியாயக்கிழமை திரிதிகை ஆ
சிரியர் தன்தந்தையின் திதிக்குத் தர்ப்பணம்செய்து
தம் கிடைக்காமல் திகைத்து பிறகு சாம்பிராணி
யால் கிடைக்கப்பெற்று புசிக்கக்கூடாமல் கல்லுங்
யலுமாயிருந்ததில் பிராமணர்கள் அபசாரஸ்தர்களா
ளென்று காருண்யத்தினால் பாடிய, கவி வெண்பா.

கொட்டு முழக்கமே கூடியிருக் கிறதே
* மட்டில்லா வன்னமீமா கோவில்—தட்டுண்ட
தென்னமோ தெய்வசிகா மணியே யேழைக்கே
இன்னவித மென்றிசைப்பா யிங்கு.

தட்டுப் படுவதுடன் சாதத்திற் கற்கொழியல்
முட்டுப்படுவதனால் முத்தய்யா—சிட்டரினால்
சீர்திருத்தி யன்னமதைச் சீரடியா ருக்கீயப்
பார்கடைக் கண்ணாலே பரிந்து.

தொண்ணூற் றூராம் நகரார் தூய[illegible]
நண்ணித்தொழுவதனால் நாயேனு[illegible]
சாதுசங்க சாலையினைச் சார்[illegible]னையிற் கட்டித்
தீதகன்று வாழச்செய் சே[illegible].

கீலகஸு ஆடிமீ 17[illegible]-பூரம்-31-7-08.

ஸ்ரீமத் தாவ[illegible] குருபூசை.

துறவுடைய சாமியெனுந் [illegible]மானே
இரவுபக லில்லாதவீசன்—[illegible]யை
கண்டுநிலைத் திருக்கக்காருண[illegible]னைக்கித்
தொண்ட ரடிக்காளாக்கு தோ[illegible].

* மட்டில்லா வன்னம் 150-பட்டைக்குமே லதிகம்.

SUN OF INDIA PRESS MADRAS. N. C.